**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் மாநிலத் திட்ட இயக்குநரின் இணைச் செயல்முறைகள், சென்னை – 06**

4186

**ந.க.எண்.3195/ஆ7/கலை/ஒபக/2022 நாள். 21.09.2022**

26 SEP 2022

**பொருள்:** பள்ளிக் கல்வித் துறை – 2022-2023 ஆம் கல்வியாண்டில் பள்ளிகளில் "கலைத் திருவிழா பயிற்சி மற்றும் போட்டிகள்" நடத்துதல் – மாவட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

**பார்வை:**
1. 2022-23 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.
2. தமிழ்நாடு, பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள். 11.06.2022

* * * * *

2022-23 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

**"மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடத்தப்படும்"**

தமிழகத்தில் உள்ள பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாகவும், பள்ளிக் கல்வி செயல்முறைகள் 2ன்படி ஒரு பகுதியாக கலை பண்பாட்டு கொண்டாட்டங்களை ஒருங்கிணைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு **கலை அரங்கம்** நிகழ்வின் கீழ் கலை சார்ந்த பயிற்சிகளும் மற்றும் 6 முதல் 12 வகுப்புகளில் அரசு மற்றும்

அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கலைத் திருவிழ போட்டிகளும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**கலை அரங்கம்**

**பள்ளிக் கல்வியில் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்**

கலைச் செயல்பாடுகள், குழந்தைகளை பிற கற்றல் செயல்முறைகளில் மிகவும் சுறுசுறுப்புடனும் ஆழமாகவும் ஈடுபட உதவுகிறது. இவை குழந்தைகளின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களை தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்றுகிறது. மேலும், அவர்களுக்கு பிடித்த கலையை கற்றுக் கொள்வதால், அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துகிறது.

பார்வை 2 இல் காணும் செயல்முறைகளில் இக்கலை செயல்பாடுகளுக்கென ஒவ்வொரு வாரமும் இரு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இது சார்ந்து கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை தவறாது பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**கீழ்காணும் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்புப் பணிகள் அனைத்தும் மாநில திட்ட இயக்ககத்திலிருந்து தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

1. ஐந்து கலை வடிவங்களுக்கான (இசை, நடனம், காட்சிக்கலை, நாட்டுப்புற கலை மற்றும் நாடகம்) கலைஞர்களை தெரிவு செய்தல்.
2. தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களை பள்ளிகளுடன் மற்றும் ஆசிரிய பயிற்றுநர்களுடன் இணைத்தல்.
3. ஐந்து கலை வடிவங்களுக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு, சார்ந்த பள்ளிகள் மற்றும் கலைஞர்களுக்கு தக்க நேரத்தில் பகிர்தல்.
4. கலை அரங்க நிகழ்வுகளுக்காக கைபேசி செயலியை வடிவமைத்து சார்ந்த பள்ளிகளுக்கு வழங்குதல்.
5. காட்சிக் கலை, நாட்டுப் புறக்கலை, நாடகம் மற்றும் நடனம் ஆகிய கலை வடிவங்களுக்குத் தேவையான பொருட்களுக்கு மாநில திட்ட இயக்கத்திலிருந்து நிதி விடுவிக்கப்படும். பள்ளி மேலாண்மைக் குழுவும்

பயற்சிக்கு தேர்ந்தெடுக்கும் 2 அல்லது 3 கலை வடிவங்களின்படி குழந்தைகளை குழுக்களாக பிரிக்க வேண்டும். பயிற்சிக்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைப்புகளை பள்ளியின் பகுதி நேர / முழு நேர கலை ஆசிரியர்கள் செய்ய வேண்டும். அவ்வாறு முழு நேர அல்லது பகுதி நேர கலை ஆசிரியர் இல்லாத பள்ளிகளில், பள்ளியில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களையும் அழைத்து இக்கலை பண்பாட்டு நிகழ்வுகளில் தன்னார்வத்துடன் செயல்பட விரும்பும் ஒரு ஆசிரியரை பொறுப்பு ஆசிரியராக (ஏதுவாளராக செயல்பட) தலைமை ஆசிரியர் தெரிவு செய்ய வேண்டும்.

6. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட ஆசிரியர்கள், வெவ்வேறு அமர்வுகளை, செயல்பாட்டு நடைமுறைகள் மூலம் எவ்வாறு ஒருங்கிணைக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
7. கல்வி செயல்பாடுகளில் கற்றல் கற்பித்தல் பாடவேளை இல்லாத மற்ற ஆசிரியர்கள் சிறிய குழுக்களை ஒருங்கிணைக்க துணை ஆசிரியராக செயல்படலாம்.

**<u>பள்ளியில் நடைமுறைப்படுத்துதல் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள்.</u>**

இசை, நடனம், நாடகம், காட்சிக் கலை, நாட்டுப்புறக் கலை எனப் பட்டியலிடப்பட்டுள்ள பல்வேறு கலை வடிவங்களைக் கொண்ட ஒரு படிவத்தில் 6 முதல் 9 வகுப்பு வரை உள்ள அனைத்துக் குழந்தைகளும் தங்களுக்கு பிடித்த கலை வடிவத்தை தெரிவு செய்ய ஆசிரியர்கள் உதவ வேண்டும். இதன் அடிப்படையில் குழந்தைகள் குழுவாக பிரிக்கப்பட்டு வகுப்பு வாரியான பட்டியல் தயாரிக்கப்பட்டு பயிற்சி அளிக்க வேண்டும்.

- அந்த வாரத்திற்கான அட்டவணையைப் பொறுத்து, 2 அல்லது 3 கலை வடிவங்கள் அறிவிக்கப்பட வேண்டும்.
- குழுக்களாக அடையாளம் காணப்பட்ட குழந்தைகள் அவர்களின் குழுவிற்கான அறைகளுக்குச் செல்லும்படி தெரிவிக்கப்படவேண்டும்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு ஆசிரியர், பொறுப்பாளராக இருக்க வேண்டும். அவர் வெவ்வேறு குழுக்களுடன் வெவ்வேறு வாரங்களில் சுழற்சி முறையில் பங்கேற்க வேண்டும்.

தேவைப்படும் போது / முடிந்தவரை காட்சிக் கலை, நாட்டுப் புறக்கலை, நாடகம் மற்றும் நடனம் ஆகிய அமர்வுகளுக்கான பொருட்களை வழங்க வேண்டும்.

**<u>கலை வடிவங்களுக்கான பாடத்திட்டம்</u>**

6 முதல் 9 வகுப்புகளுக்ககான பாடத்திட்டத்திற்கு ஏற்றாற்போல் 5 கலை வடிவங்களுக்கு இசை, நடனம், காட்சிக் கலை, நாட்டுப்புற கலை மற்றும் நாடகம் (Music, Dance, Visual Art, Folk Art and Theatre) பாடத்திட்டம் தயாரிக்கப்படும். பாடப் பகுதியிலிருந்து கருத்துகள் தெரிவு செய்யப்பட்டு, மாணவர்களின் பங்கேற்பு மற்றும் புரிதலை மேம்படுத்தும் வகையில் பல்வேறு கலை வடிவங்களுக்கு ஏற்றவாறு அவைகள் மாற்றி அமைக்கப்படும். இதன் வாயிலாக மாணவர்கள் தெளிவை பெறுவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு கலை வடிவங்களின் அம்சங்களையும் கூறுகளையும் கற்றுக் கொள்வார்கள்.

**<u>கல்வியில் கலையை ஒருங்கிணைப்பதற்கான அணுகுமுறை</u>**

1. பள்ளிச் செயல்பாட்டின் கால அட்டவணையில் கலை மற்றும் பண்பாட்டு செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
2. நாட்டுப்புறக் கலைஞர்கள், பயிற்சியாளர்கள், கலை-நெறியாளர்கள், வல்லுநர்கள், கலைத் தொடர்பான அரசு நிறுவனங்கள் போன்ற வளங்கள், பள்ளி, குறு வளமையம், வட்டாரம் அருகில் இருக்கும் கலைஞர்களை கண்டறிந்து, அந்த கலைஞர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வந்து பயிற்சி அளிக்கும் வகையில் மாநில அளவில் முயற்சிகள் எடுக்கப்பட்டு சார்ந்த பள்ளிகளுடன் ஒருங்கிணைக்கப்படுவர்.
3. ஒவ்வொரு வாரமும் இரண்டு/மூன்று முக்கிய கலை வடிவங்களில், குழந்தைகளை ஈடுபடுத்த வாய்ப்புகள் தர வேண்டும்.
4. வாரத்தில் ஒரு நாள், கடைசி 2 பாடவேளைகள் கலை செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும்.
5. 6 முதல் 9 வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு முழுமையாக பங்கேற்க வேண்டும். அதே வேளையில் அந்த வாரத்தில்

- அனைத்து அறைகளிலும் கலை வடிவங்களுக்கு ஏற்ப தேவையான பொருட்கள் இருப்பதை உறுதி செய்வதற்கு ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பாளர் ஒருவர் இருத்தல் அவசியமாகும்.
- நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் - பள்ளிகளில் கலை ஆசிரியர்கள் (சார்ந்த பள்ளியில் இருப்பின்) இந்த செயல்முறையை ஒருங்கிணைத்தல் வேண்டும்.
- 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வாரந்தோறும் கீழ்காணும் கலை வடிவங்களில் பயிற்சி அமர்வுகள் இருக்க வேண்டும்.

➢ இசை - தமிழ் இசை

➢ நாட்டுப்புறக் கலை - உடுக்கை, பறை, ஒயில், கரகாட்டம், கும்மி, இன்ன பிற.

➢ நடனம் - நாட்டியம் - மயிலாட்டம், தேவராட்டம், பரதநாட்டியம், இன்ன பிற.

➢ நாடகம் - பொம்மலாட்டம், தோல் பாவைகூத்து, தெருக்கூத்து, இன்ன பிற.

➢ காட்சிக் கலை – புகைப்படம் எடுத்தல், குறும்படம் எடுத்தல், வரைதல், ஓவியம், களிமண் வேலை, இன்ன பிற.

சூழல் மற்றும் கலைஞர்களின் அடிப்படையில் பள்ளி அளவில் 2 அல்லது 3 கலை வடிவங்களைத் தேர்வு செய்தல் வேண்டும்.

**<u>பள்ளியில் நடைமுறைப்படுத்துதலில் தலைமை ஆசிரியர் / ஆசிரியரின் பங்கு</u>**

தலைமை ஆசிரியர் தனது பள்ளி அமைந்துள்ள பகுதியில் உள்ள கலை வடிவங்கள் அல்லது கிடைக்கக்கூடிய வளங்களின் அடிப்படையில், குறைந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று கலை வடிவங்களாவது தனது பள்ளியில் தேர்தெடுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

1. ஒவ்வொரு பள்ளியிலும் கலை பண்பாட்டு நிகழ்வுகளை ஒருங்கிணைக்க ஒரு பொறுப்பு ஆசிரியர் (ஏதுவாளராக செயல்பட) அடையாளம் காணப்பட வேண்டும். சார்ந்த பள்ளியில் முழு நேர அல்லது பகுதி நேர கலை ஆசிரியர் இருப்பின் அவர்களை இந்நிகழ்வுகளுக்கு பொறுப்பு ஆசிரியராக நியமிக்கலாம். அவ்வாறு முழு நேர அல்லது பகுதி நேர கலை ஆசிரியர் இல்லாத பள்ளிகளில், பள்ளியில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களையும் அழைத்து இக்கலை பண்பாட்டு நிகழ்வுகளில் தன்னார்வத்துடன் செயல்பட விரும்பும் ஒரு ஆசிரியரை பொறுப்பு

ஆசிரியராக (ஏதுவானராக செயல்பட) தலைமை ஆசிரியர் தெரிவு செய்ய வேண்டும்.

2. பொறுப்பு ஆசிரியரை தெரிவு செய்த பிறகு, அவருக்கு இத்திட்டம் மற்றும் அவருடைய பொறுப்புகள் பற்றிய முழு புரிதல் இருப்பதை தலைமை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.
3. 6 முதல் 9 ஆம் வகுப்புவில் பயிலும் அனைத்து மாணவர்களும் கலை பண்பாட்டு நிகழ்வுகளில் அவர்கள் விரும்பும் கலை வடிவத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
4. குழுவாக பிரிக்கப்பட்ட அனைத்து மாணவர்களும் தாங்கள் தெரிவு செய்த கலை வடிவக் குழுவில் தாங்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.
5. குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கான பாடத் திட்டம் முன்கூட்டியே தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படும். ஏனெனில் பாடத்திட்டம் தொடர்பாக ஏதேனும் பொருட்கள் தேவையிருப்பின் அவைகளை தயார் நிலையில் வைத்திருக்க ஏதுவாக அமையும். (பள்ளி மேலாண்மைக் குழுவின் வாயிலாகவும் பொருட்களை பெறலாம்.)
6. குறிப்பிட்ட கால பாட வேளைக்குள் இந்நிகழ்வுகள் முடிக்கப்படுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்திட வேண்டும்.
7. ஒரு மாதத்திற்கு தேவையான ஒரு குறிப்பிட்ட கலை வடிவத்திற்கான பொருட்களை முன்கூட்டியே வாங்கி வைக்கப்பட்டிருப்பதை தலைமை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.
8. கலை அரங்க நிகழ்வுகள் தொடங்குவதற்கு முன், தங்கள் பள்ளிக்கென அடையாளம் காணப்பட்ட கருத்தாளர்களை தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.
9. அந்தந்த கலை வடிவங்களுக்கான குழந்தைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இடம்/வகுப்பறைகள் முன்கூட்டியே அடையாளம் காணப்பட்டு பொறுப்பு ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.
10. தலைமை ஆசிரியர், கலை அரங்க நிகழ்வுகள் தொடங்குவதற்கு முன் பள்ளி மேலாண்மைக் குழு, பொறுப்பு ஆசிரியர் மற்றும் பிற ஆசிரியர்களுடன் ஒரு முதற்கட்ட கூட்டம் நடத்தி, கலை நிகழ்வுகளுக்குத் தேவையான அனைத்து

திட்டங்கள், இடம், குழுக்கள் ஆகியன தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**பொறுப்பு ஆசிரியரின் (ஏதுவாளரின்) பங்கு**

1. பள்ளியில் கலை அரங்க நிகழ்வுகள் அனைத்தையும் ஒருங்கிணைக்க வேண்டும். பள்ளி அவர் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புளை முழுமையாக உணர்ந்து செயல்படவேண்டும்.
2. மேற்குறிப்பிட்ட 3 முதல் 10 நடவடிக்கைகளுக்கு தலைமை ஆசிரியருக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.
3. தங்கள் பள்ளிக்காக அடையாளம் காணப்பட்ட கலைஞர்களைப் பற்றி விரிவாக புரிந்து கொள்ள வேண்டும்.
4. ***தங்கள் பள்ளிக்கான திட்டம் எந்த இடையூறுமின்றி சீராக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். பொறுப்பு ஆசிரியர் ஒரு சிக்கலை எதிர்நோக்கினாலோ அல்லது அந்நாளுக்கான நிகழ்வினை ஒத்திவைக்க நேர்ந்தாலோ சம்மந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களிடமும் தொடர்பு கொண்டு, தேவையான மாற்றுத் திட்டம் அல்லது ஏற்பாட்டைச் செய்து அதை உறுதிப்படுத்துவதற்கு முன் தலைமை ஆசிரியரிடம் கலந்துரையாட வேண்டும்.***
5. அவ்வப்போது நடைபெறும் கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல் நிகழ்வுகளில் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும்.
6. தலைமை ஆசிரியருடன் கலந்தாலோசித்து, மாதாந்திரம் நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் கலை அரங்கத்தின் செயல்முறை மற்றும் முன்னேற்றம் குறித்து விளக்கப்படவேண்டும்.
7. இச்செயல்பாட்டின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டு வரும் செயலியில் நாள்தோறும் தரவுகள் புதுப்பிக்கப்படுவதையும், தகவல் பலகையில் உள்ள (டாஷ்போர்டு) தகவலின் அடிப்படையில் இடைவெளிகளைத் தொடர்ந்து நிவர்த்தி செய்வதையும் உறுதி செய்ய வேண்டும்.

## கலைஞர்களின் பங்கு

1. கலைஞர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களைத் தொடர்பு கொள்ள வேண்டும். தங்களுக்கான படிவத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்பள்ளியின் பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒப்புதலை பெற்று, உண்மையான நிகழ்விற்கு ஒரு நாளைக்கு முன்னதாகவே பள்ளிக்குச் சென்று ஆயத்த பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
2. அடுத்த மாதத்திற்கு தேவையான அனைத்து பாடத் திட்டங்களையும், தயாரிப்புகளையும் முந்தைய மாதத்திலேயே தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். (பள்ளிக் கல்வித் துறை சார்பில் கலை வடிவங்களுக்காக வழங்கப்பட்ட பாடத்திட்டம்)
3. குறிப்பிட்ட நாளில் பள்ளிக்கு வர இயலவில்லை என்றால், தலைமை ஆசிரியருக்கு முன்கூட்டியே தெரிவித்து, மாற்றுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு பொறுப்பு ஆசிரியருடன் இணைந்து தேவையான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.
4. கலைஞர்கள் ஒரு குறிப்பிட்ட வாரத்தில் செயல்படுத்தப்படவேண்டிய பாடத்திட்டத்திலிருந்து ஏதேனும் மாற்றம் செய்ய விரும்பினால், சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் பொறுப்பு ஆசிரியர்களிடம் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.
5. அவ்வப்போது நடைபெறும் கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல் நிகழ்வுகளில் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும்.
6. கலை அரங்க நிகழ்வுகள் பள்ளியில் தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன் பள்ளியில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

## மாணவர்களின் பங்கு

1. மாணவர்கள் தாங்கள் விரும்பும் கலை வடிவத்தை முடிவு செய்து அதில் சேரலாம். அவர்கள் ஒரு வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட கலை வடிவத்தில் பயில வேண்டும் என்பதையும், அடுத்த ஆண்டில் மட்டுமே எந்த ஒரு மாற்றமும் நிகழ முடியும் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

2. மாணவர்கள் தாங்கள் விரும்பும் கலை வடிவத்தின் குழுவை நினைவில் வைத்துக்கொண்டு அந்த அமர்வில் கலந்து கொள்ள வேண்டும்.
3. மாணவர்கள் ஒவ்வொரு அமர்விலும் தாங்கள் கற்றுக் கொண்டதை ஆவணப்படுத்த ஒரு குறிப்பேடு வைத்திருக்க வேண்டும்.
4. மாணவர்கள் தங்கள் கலை வடிவ அடிப்படையிலான வாராந்திர பணிகளை விடாமுயற்சியுடன் முடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
5. மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட கலை வடிவத்தினை பற்றி தங்கள் பெற்றோருடனும், மற்றவர்களிடமும், அருகில் உள்ள பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**<u>பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு</u>**

1. தங்கள் பள்ளியில் கலை பண்பாட்டு செயல்பாடுகள் தொடங்குவது சார்பு தீர்மானம் நிறைவேற்றப்படுவதை பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்ய வேண்டும்.
2. அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தேவைப்படும் போது / முடிந்தவரை காட்சிக் கலை, நாட்டுப் புறக்கலை, நாடகம் மற்றும் நடனம் ஆகிய அமர்வுகளுக்கான பொருட்களை வழங்க வேண்டும்.
3. இத்திட்டத்தை திறம்பட பள்ளிகள் செயல்படுத்துவதற்கு பள்ளி மேலாண்மைக் குழு ஊக்கமளிக்க வேண்டும்.
4. இந்நிகழ்வில் பங்கு பெறும் மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.
5. பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில்/ பள்ளியில் நடை பெறும் விழாக்களில்/ பள்ளியில் நடத்தப்படும் போட்டிகளில் மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட கலை சார்ந்து தங்களின் கருத்துகளை பகிர்ந்து கொள்ளலாம் / நிகழ்த்தி காட்டலாம்/ கலந்து கொள்ளலாம்.

**<u>ஆசிரிய பயிற்றுநர்களின் பங்கு</u>**

1. சம்பந்தப்பட்ட அனைத்து பள்ளிகளிலும் கலை பண்பாட்டு நிகழ்வுகள் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

2. பள்ளி மற்றும் கலைஞர்களுக்கு இடையில் ஒரு பாலமாக இருந்து இச்செயல்பாடுகள் பள்ளிகளில் திறம்பட செயல்பட உறுதுணையாக இருக்க வேண்டும்.
3. இச்செயல்பாட்டின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டு வரும் செயலியில் தரவுகள் நாள்தோறும் புதுப்பிக்கப்படுவதையும், தகவல் பலகையில் உள்ள (டாஷ்போர்டு) தகவலின் அடிப்படையில் இடைவெளிகளைத் தொடர்ந்து நிவர்த்தி செய்வதையும் உறுதி செய்ய வேண்டும்.

***முதற்கட்டமாக இக்கலை அரங்க நிகழ்வுகள் அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, மதுரை, நாமக்கல், இராமநாதபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் துவங்கப்படவுள்ளது.***

***இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 22 மாவட்டங்களில் அக்டோபர் மாதம் நான்காம் வாரத்திலிருந்து துவங்கப்படவுள்ளது.***

## கலைத் திருவிழா

டிசம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து பல்வேறு கலை வடிவங்கள் சார்ந்து போட்டிகள் நடத்தப்படும். தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடத்தி, பள்ளி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பங்கேற்புடன் ஆண்டு தோறும் மாநில அளவிலான கலைத் திருவிழா நடத்தப்படும்.

பிரிவு 1 : 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை

பிரிவு 2 : 9 மற்றும் 10 ஆம் வகுப்பு

பிரிவு 3 : 11 மற்றும் 12 ஆம் வகுப்பு

மாணவர்களுக்கு அவர்களின் திறமைக்கு அங்கீகாரம் அளிக்கும் ஒரு மேடையாக இத்திருவிழா நடத்தப்படும். இக்கலைத் திருவிழா பல்வேறு கலை வடிவங்களுக்கு ஊக்கமளிப்பதற்கும், தமிழகத்தின் கலை வடிவங்கள் மற்றும்

பண்பாட்டைக் குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ள இச்செயல்பாடுகள் வழிவகுக்கும்.

கீழ்காணும் அட்டவணையின்படி போட்டிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதம் மூன்றாம் வாரம் பள்ளி அளவில்

டிசம்பர் மாதம் நான்காம் வாரம் வட்டார அளவில்

ஜனவரி மாதம் முதல் வாரம் மாவட்ட அளவில்

ஜனவரி மாதம் இரண்டாம் வாரம் மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் நடத்தப்படும்.

பள்ளி அளவில் வெற்றி பெறும் மாணவர்களை வட்டார அளவிலும், வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அளவில் நடைபெறும் கலைத் திருவிழாவில் பங்கேற்ச் செய்ய வேண்டும். மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் மற்றும் கலையரசன், கலையரசி என்ற விருதுகளும், மாநில அளவில் தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டு மாணவர்களின் கலைத்திறன்கள் ஊக்கப்படுத்தப்படும். மேலும், **மாநில அளவில் இவ்வாறு வெற்றி பெறும் 20 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| இயக்குநர் (பொ) | மாநிலத் திட்ட இயக்குநர் | for ஆணையர் |
| தொடக்கக் கல்வி இயக்ககம் | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | பள்ளிக் கல்வித் துறை |

**பெறுநர்**

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலவலர்கள்.